ISBN : 978-81-685845-9-4

செந்தமிழறிஞர்கள்:108



தெ பொ மீனாட்சிசுந்தரனார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/80.%20%E0%AE%A4%E0%AF%86.%E0%AE%AA%E0%AF%8A.%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1901

செந்தமிழ்சிற்பிகள்

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் (1901-1980)



அறிமுகம்

தென்பட்டினம் பொன்னுசாமியின் திருமகனாகப் பிறந்த தெ.பொ.மீனாட்சி-சுந்தரனார், தமிழக மக்களால் 'தெ.பொ.மீ.' என்று மதிப்போடு அழைக்கப் பெற்றவர். ஏறக்குறைய எண்பது ஆண்டுக் காலம் (8.1.1901 - 27.8.1980) தமிழ் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர்: 'பன்மொழிப் புலவர்', 'பல்கலைச் செல்வர்', 'நடமாடும் பல்கலைக்கழகம்', 'பெருந்தமிழ்மணி', 'குருதேவர்', 'பத்மபூஷண்', 'கலைமாமணி' முதலான பல்வேறு சிறப்புப் பெயர்களாலும் பட்டங்களாலும் சிறப்பிக்கப்பட்டவர். சென்னை மாநகராட்சியின் ஆல்டர்மென், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலர், மாநிலக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்-கழகத்தின் மொழியியல் துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர், சிகாகோ பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலைப் பேராசிரியர், திராவிட

மொழியியல் கழகத்தின் முதுநிலை ஆய்வாளர், ஆழ்நிலைத் தியானத்தின் தேசியக் குழு உறுப்பினர் -எனப் பல்வேறு பொறுப்புகளில் வீற்றிருந்து தமிழ்நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் அருந்தொண்டு ஆற்றியவர்.

சட்டம், வரலாறு, உளவியல், தத்துவம், இலக்கியம், இலக்கணம், மொழியியல், ஆன்மிகம் முதலான பல்வேறு அறிவுத் துறைகளில் பழுத்த புலமை பெற்றிருந்தவர். அவருக்கு அன்பும் அறிவும் குழைத்து ஊட்டி வளர்த்த அவரது தமையனார் சதாவதானம் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலரைத் தமிழ் கூறு நல்லுகம் நன்கறியும்.

இவரைப் போல இன்னொரு மகன் எனக்கு கிடைப்பானா எனத் தமிழே ஏங்குமளவிற்கு அழ்ந்த அறிவும் புலமையும் பெற்றுத் தன் பணிகளால் தமிழுக்கு பெருமையும் புகழையும் ஈட்டித்தந்தவர்.பன்மொழி புலவர், பல்கலைவித்தகர், சங்க இலக்கிய வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படைத்தவர். தன் முப்பத்தி ஆறாம் வயதிலேயே பன்மொழிப் புலவர் எனும் பட்டம் ஈன்ற பெருமகனார்.

(😊)(😊) &&&&& (😊)(😊)

இலக்கிய/தமிழியல் பணி

கலைக்களஞ்சியம்

தெ, பொ. மீனாட்சிசுந்தரம் கலைக்களஞ்சியத்தில் தமிழ் எழுத்தியல், மொழியியல், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் 88 கட்டுரைகள் எழுதினார்.

இலக்கிய ஆய்வு

தெபொமீ 'கலாநிலையம்', 'விவேக சூடாமணி', 'லோகோபகாரி', 'நவசக்தி' ஆகிய இதழ்களில் இலக்கியம், மொழியியல், தத்துவம் பற்றிய கட்டுரைகளை எழுதினார். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை

"நாடகக் காப்பியம்" என்றும் "குடிமக்கள் காப்பியம்" என்றும் வரையறுத்தார்.

திருக்குறள் பற்றி 'வள்ளுவரும் மகளிரும்' ' 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' ஆகிய நூல்களை எழுதினார்

'தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவை' என்ற நூலில் தமிழ்நாட்டுச் சடங்குகளுக்கும், தாய்லாந்து நாட்டு சடங்குகளுக்கும் உள்ள ஒற்றுமையை இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளோடு விளக்கினார். தாய்லாந்தின் ஊஞ்சல் திருவிழா தமிழ்நாட்டின் பாவை நோன்புடனும் திருவெம்பாவை, திருப்பாவையுடனும் தொடர்புடையது என்பதை சான்றுகளுடன் நிறுவினார்.

மொழியியல்

தமிழில் மொழியியல் துறையின் முன்னோடியாகக் கருதப்படும் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் மொழியியல் நோக்கில் மொழியை அணுகி ஆராயும்போது மொழியின் கட்டமைப்பையும் அது சமுதாயத்தில் வழங்கி வரும் முறையையும் காணலாம் என்பதைத் தன் ஆய்வுகளின் மூலம் அறியச் செய்தார்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் இலக்கண வரலாற்றை வடமொழி இலக்கணம், தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் தாக்கத்தின் அடிப்படையில் ஆய்வுசெய்தார்.

தெபொமீ தமிழ் மொழி எழுத்துக்களை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றியும், திருத்தியும், குறைத்தும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

"Rhythm of the common speech; Glorification by Bharathi" என்ற நூலில் பாரதியின் மொழிநடை தமிழ் மரபிலிருந்து எதைப் பெற்றுக்கொண்டது என்பதைஆராய்கிறார்.

நோம் சோம்ஸ்கியின்(Noam Chomsky) மாற்றிலக்கணம் (transformational grammar) என்ற கோட்பாட்டை தமிழுக்கு

அறிமுகம் செய்யும் முகமாக தமிழ் எடுத்துக்காட்டுகளுடன் 'மாற்றிலக்கணம்'என்ற நூலை எழுதினார்.

அறிவியல் தமிழ்

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் வழிக் கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தார். ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கை போன்ற அறிவியல் தத்துவங்களைத் தமிழில் எழுதினார்.

விக்கிமூலம்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A8%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%A3%E0%AF%88_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

நற்றிணை நாடகங்கள் (1954)

ஆசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ஆசிரியர்
முன்னுரை

எனக்குப் பிறந்த முதல் குழந்தை ஈராண்டுக்குள் இறந்தது. வருத்தத்தில் மூழ்கிய எனக்கு அந்த வருத்தத்தினை மறக்கச் சிந்தாதரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளித் தொண்டு கிடைத்தது; அதன் செயலாளன் ஆனேன். ஆதலின், அதனை, மகவெனவே கொண்டு வாழலாயினேன். சிந்தாதிரிப்பேட்டைத் தொடக்க நிலைப் பள்ளி, இராவ் பகதூர் கலவலகண்ணன் செட்டியார் பெண்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை மாண்டிசோரிப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை ஆரம்பப் பள்ளி, சிந்தாதிரிப்பேட்டைக் கலியாணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி. சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி எனப் பள்ளிகள் இன்று வளர்ந்தோங்கி உள்ளன. சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியனாகத் தொண்டாற்றவந்ததும் பள்ளிகளின் செயலாளன் எனத் தொடர்ந்திருப்பது இயலாததாயிற்று. திரு. துரை வேலனார் அன்புடன் முன்போந்து செயலாளராகத்

தொண்டாற்றிவருகிறார். ஆதலின், வருத்தம் ஒருவாறு எனக்கு மகிழ்ச்சியாக மாறியது.



பள்ளியோடு கால் நூற்றாண்டு தொடர்ந்திருந்த என் நினைவைப் பாராட்டவேண்டும் என்று நண்பர்கள் விரும்பினார்கள். தொண்டினைச் செய்தோம் என்ற நிறைவுள்ளமே பெரிய பாராட்டு. அதற்கு மேலும் பாராட்டு ஏன்? ஆனால் இளைய நண்பர்கள் ஒரு சூழ்ச்சி செய்தனர். யான் எழுதிய கட்டுரைகள் இதுவரை நூல்வடிவில் வெளிவராதவற்றைத் திரட்டி நினைவுப்பதிப்பாக வெளியிடுவதே இந்தப் பாராட்டு என்றபோது எவ்வாறு நான் மறுக்கத்தகும்?

இந்தச் சூழ்ச்சியைச் செய்த திரு. துரைவேலனார், திரு. பிநாகபாணியார், திரு. சண்முகசுந்தரனார், திரு. இராசேசுவரி அம்மையார், திரு. துரைக்கண்ணனார். திரு. துரை அரங்கனார் முதலியோருக்கும் இதனைத் தம் பதிப்பாக அச்சிட முன்வந்த திரு. பழனியப்பா அவர்களுக்கும் நான் என்ன கைம்மாறு செய்ய முடியும் ?

இப்போது, நற்றிணைப் பாடல்களுள் ஒன்பது பாடல்கள் கொண்டு நான் எழுதிய சிறு நாடகங்கள் வெளிவருகின்றன. இவற்றுள் சில, பத்திரிகைகளிலும், வானொலியிலும் வெளியானவை.

இவற்றைத் தமிழ்மக்களுக்கு என்றே எழுதினேன். அவர்கள் என்ன நினைக்கின்றார்களோ? என் கருத்துக்கள் என் கருத்துக்களே ! என் முகம்போல மற்றோரு முகம் இராது. ஆதலின், என் கருத்துக்கள் எல்லோர் கருத்துமாக முடிவது அருமை. என்றாலும், அன்பினால்

குற்றத்தினைப் பொறுத்து வாழ்த்துவது அன்றோ தமிழ் மரபு? அதனையே நம்பி வாழ்கறேன்.

சென்னை,

4-12-1954.

தெ. பொ. மீ.
வெள்ளிவிழாக் குழுவினர்
அணிந்துரை

ஆறு கிளைகளாகப் படர்ந்து, மூவாயிரம் மாணவர்களுக்குக் கல்விப்பயிற்சியாம் தண்ணிழல்தரும் கற்பகத் தருவான சென்னைச் சிந்தாதிரிப்பேட்டைக் கல்விநிலையக்குழுவின் செயலாளராகச் சென்ற இருபத்தைந்தாண்டுகள் தந்நலம் சிறிதும் கருதாது அதனைத் தழைத்து வளரச்செய்துவந்த பேராசிரியர், பல்கலைச்செல்வர். பன் மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாருடைய வெள்ளிவிழா இரண்டாம் மலராக **"நற்றிணை நாடகங்கள்"** என்ற இந்நூல் தமிழுலகை அணிசெய்ய வெளிவருகிறது. இமயம் முதல் குமரிவரையில் இப்பேராசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகள் கணக்கிலடங்கா. ஆனால், அவையெல்லாம் காற்றில் கலந்துவானில் ஒன்றாயின. அவ்வப்போது இவர் தமிழ் வெளியீடுகளிலும், ஆங்கில வெளியீடுகளிலும் எழுதிவந்த கட்டுரைகளும் எண்ணிலடங்கா. ஆனால், அவை யெல்லாம் தொகுக்கப்பெறாமல் சிதறுண்டுள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்துப் பல வெளியீடுகளாகத் தமிழுலகிற்கு வழங்கவேண்டும் என்பது எங்கள் பேரவா. இவ்வவாவினை நிறைவேற்றுவதற்குப் பொருள் மிகுதியும் தேவை என்பது சொல்லத் தேவையில்லை. எனினும், எவ்வாறேனும் எங்கள் விருப்பத்தை இவ் வெள்ளிவிழாவில் நிறைவேற்றவேண்டும் என்ற துணிவு கொண்டு, பேராசிரியர் எழுதிய கட்டுரைகளில் பலவற்றைத் திரட்டிப் பத்து வெளியீடுகள் வரையில் தொகுத்துள்ளோம். ஆனால், பொருள் முட்டுப்பாடு எங்களைத் திகைக்கவே செய்தது. அப்போது சமய சஞ்சீவியாய்த் தமிழ்வள்ளல், சைவசமயப் புரவலர், உயர்திருவாளர் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியாரவர்கள், எங்களுக்கு ஊக்கம் அளித்துத் தமிழ் நூல்களை அழகாக அச்சிட்டு வெளியிடுவதையே தமிழன்னையின் வழிபாடாகக் கொண்டிலகும் உயர்திருவாளர் பழனியப்பச் செட்டியாரவர்களிடம் அறிமுகப்படுத்திவைத்தார்கள். தம்முடைய இயல்பான இனிமைப் பண்பில் உயர் திருவாளர் பழனியப்பச் செட்டியாரவர்கள் எங்கள் செயலைப் பாராட்டிப் பேராசியர் எழுத்துக்கள் அனைத்தையும் வெளியிட இசைந்து. முதலில் வள்ளுவர் கண்ட நாடும்

காமமும் என்ற நூலை அச்சிட்டு, அடுத்து இரண்டாவதாக இந்நூலை விரைவில் அழகாக அச்சிட்டுத்தந்தார்கள். இவ்விரு பெருஞ்செல்வர்களுக்கும் நாங்கள் ஆற்றும் கைம்மாறு ஏதும் அறியோம். எல்லாம் வல்ல ஆண்டவன் அவர்கட்கு எல்லா நலங்களும் அளித்தல் வேண்டுமென அவ் வாண்டவனை வேண்டி அமைகின்றோம்.

இந்நூலின் சிறப்பினை வரையறை செய்து கூறுவது எம்மனோர்க்கு இயலாததொன்று. ஒப்புயர்வற்ற நூல் இஃதாகும் என்று கூறி அமைகிறோம்.

சங்க நூல்கள், பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் எனப்பகுக்கப்பட்டிருப்பதைத் தமிழர் அனைவரும் அறிவர். எட்டுத் தொகை எனப்படும் நூல்களுள் நற்றிணையே தலைசிறந்தது. எட்டுத் தொகை நூல்கள் இவை என்பதை ஒரு பழம் பாடல்,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்று இயம்புகிறது. இப் பாடலில் முதற்கண் வைத்து எண்ணப்பெறும் பெருமை நற்றிணைக்கே அமைந்துள்ளது. மேலும் குறுந்தொகை என்பதும் "நல்ல குறுந்தொகை" என்று சிறப்பிக்கப் பெற்றிருந்தாலும், 'நல்' என்ற அடைமொழி, பிரிக்க முடியாதபடி நற்றிணைக்கே பொருந்தியுள்ளது. இவ்விரண்டே சாலும் நற்றிணை எட்டுத் தொகையுள் தலைசிறந்தது என்பதற்கு. இந்நூலுள் நானூறு பாடல்கள் நன்மணிகளெனத் திகழ்கின்றன. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு நாடகமாக விரிக்கலாம். இம் முறையில் ஒன்பது பாடல்களைச் சிறு நாடகங்களாக அமைத்து அப் பாடல்களை நன்கு விளங்கிக்கொள்ளும் வகையில் உயர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சிறந்ததொரு தமிழ்த்தொண்டு ஆற்றியிருக்கின்றார். இந் நவமணியுள் ஒவ்வொன்றன் சிறப்பையும் தனித் தனி எழுதிக்காட்டுதல் வேண்டா. ஒளியும் சுவைமிகுதியும் ஒவ்வொன்றிலும் உண்டு. படித்துச் சுவைக்க முற்பட்டுவிட்டால் தங்கு தடையின்றி முழுதும் சுவைத்து விட்டே நூலைக் கீழே வைக்கத்தோன்றும் என்ற அளவு நூலின் சிறப்பைப்பற்றிக் கூறினால் போதும் என்று கருதுகிறோம்.

இந்நூலைத் தமிழ்மக்கள் அனைவரும் விரும்பி ஏற்பார்கள் என்பது திண்ணம்; ஏற்பின், இதனால் பெரும் பயன் அடைவர் என்பதும் திண்ணம்.

தொடுமிடந்தொறும் சுவைநயம் தோன்ற ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு சிறு நாடகமாக அமைத்துத் தந்த திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நீடு வாழ்க! இவற்றொடு நின்றுவிடாது. நற்றிணையில் உள்ள எல்லாப் பாடல்களுக்கும் இங்ஙனமே திரு. தெ. பொ. மீ. அவர்கள் சிறு நாடகங்கள் எழுதித் தமிழ்மக்கள் அனைவரையும் நூலில் திளைக்கும்படி செய்வார்களாக! வாழ்க நற்றிணை ! வாழ்க தமிழ்மொழி !

உள்ளுறை

கல்விப் பணிகள்

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழகத்தின் புகழ்பெற்ற கல்வியாளர்களில் ஒருவர். நாற்பதாண்டுகாலம் தமிழகக் கல்வி வளர்ச்சிக்காகப் பணியாற்றினார்.

- 1924-ல் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியபோது சிந்தாதிரிப்பேட்டையிலும், சுற்றுப்புறங்களிலும் பல ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தி, அவற்றின் வளர்ச்சியை தொடர்ச்சியாக கண்காணித்தார்.

- 1936-ல் கோ. வடிவேலு செட்டியாரின் மரணத்திற்குப்பின் வேதாந்த சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். முதுகலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகள் எடுத்தல், சென்னைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி பல இலக்கிய மாநாடுகளை நடத்துதல் ஆகிய பணிகளை இக்காலகட்டத்தில் மேற்கொண்டார்.
- 1944-ல் ராஜா.சர்.அண்ணாமலை செட்டியாரால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டு 1946 வரை பணியாற்றினார்.
- 1954-ல் சென்னை மாநிலக் கல்லூரியின் தலைமைத் தமிழ் பேராசிரியராகப் பணியேற்று, ஒப்பிலக்கியத்தையும், கல்வெட்டு மொழி ஆய்வையும் பாடங்களாக்கினார். மீண்டும்
- 1958-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.
- 1945-ல்நடைபெற்ற அனைத்திந்திய வரலாற்று மாநாடு திராவிடப் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தை தலைவராக நியமித்தது.

- 1961ல் சிகாகோ பல்கலைகழகத்தில் தமிழ்த் துறை தொடங்கப்பட்டபோது தெ. பொ. மீனாட்சிசுந்தரம் வருகைதரு பேராசிரியராக அழைக்கப்பட்டு பத்து சொற்பொழிவுகள் தமிழ் மொழி வரலாற்றைப் பற்றியும் பத்து சொற்பொழிவுகள் தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் ஆற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அச்சொற்பொழிவுகளின் இறுதிவடிவம் ' A history of Tamil Language' 'A history of Tamil literature' என்ற இரு நூல்களாக வெளியானது.
- 1963 முதல் 65 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் உயராய்வு மையத்தின் (Advanced Centre for Dravidian Linguistic) இயக்குனராகப் பணியாற்றி தமிழகத்தில் மொழியியல்

கல்வி தனித்து வளர்வதற்கும் துறைசார் ஆய்வாளர்கள் பலரைத் தோற்றுவிக்கவும் காரணமானார்.

- 1966 முதல் 1971 வரை மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக பணியாற்றினார். மதுரை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக புதிய அறிவியல் துறைகள், உயிரியல், பொருளாதாரம், கணிதம் போன்ற துறைகளைத் தொடங்கினார். தமிழ்த்துறை தமிழியல் துறையாக அமையவும், ஒப்பிலக்கியத் துறை உருவாகவும் வழி வகுத்தார். தொலைதூரக் கல்வியை அறிமுகப்படுத்தினார்.
- 1973-74-ம் ஆண்டுகளில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளராக பொறுப்பேற்றார்.
- 1974 முதல் ஆழ்நிலைத் தியானத் தேசியக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

இலக்கிய இடம்/மதிப்பீடு

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கல்வியாளர், இலக்கிய ஆய்வாளர், மொழியியலாளர், மெய்யியலாளர் ஆகிய தளங்களில் பங்களிப்பாற்றினார்.

- பல்கலைக் கழக பேராசிரியர். துணைவேந்தர் ஆகிய நிலைகளில் பணியாற்றிய தெ.பொ.மீ தமிழ் கல்விச்சூழலில் மொழியியலையும் ஒப்பிலக்கியத்தையும் பாடமாக்கி ஆய்வாளர்களுக்கு வழிகாட்டினார். இலக்கியத் துறையில் ஆய்வு, ஆய்வு வழிகாட்டல், இலக்கண மொழியியல் கோட்பாடு, இலக்கியக் கோட்பாடு, மொழி வரலாறு ஆகியவற்றின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றினார். சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிரிவு தொடங்க ஆவன செய்தார். அவரது ஆய்வுகள் சிந்தனைகள் கட்டுரைகள் நூல்கள் யாவும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுக்கு அறிவியல் நெறிப்பட்ட அணுகுமுறைகளை புதிய செல்நெறிகள் வழங்கிச் சென்றுள்ளன.

- மொழியியலில் ஒப்பிலக்கணம், மாற்றிலக்கணம் ஆகியவற்றை தமிழுக்கு அறிமுகம் செய்தார். அவற்றை பல்கலைகழகத்தில் பாடமாக ஆக்கினார்.ஒப்பிலக்கண ஆய்வு, மொழி வரலாற்றாய்வு என மொழியியல் ஆய்வை இரு கோணங்களில் அணுகினார். தமிழ் இலக்கணத்தில் பிறமொழிக்கூறிகளை ஆய்வு செய்தார். திராவிட மொழியியல் உயராய்வு மையத்தின் தலைவராக திராவிட மொழிகளின் ஒலியமைப்பை விளக்கிய முன்னோடி. திராவிட மொழிகளின் பால்பாகுபாடுகள் பற்றிய பற்றிய அவரது ஒப்பிலக்கண ஆய்வு அத்துறையில் முன்னோடியாகக் கருதப்படுகிறது.
- தெ.பொ.மீ இலக்கிய ஆய்வை வரலாற்று நோக்கில், அறிவியல் முறைமைப்படி நிகழ்த்தினார். தமிழ் இலக்கியங்களை புறவயமான ஆய்நோக்கி வகுத்துரைத்தார்.
- இறுதிக்காலத்தில் மெய்யியலில் ஆர்வம் கொண்டிருந்த தெ.பொ.மீ ஆழ்நிலைத் தியானப் பயிற்றுநராகப் பணிபுரிந்தார். தமிழர் மெய்யியலை ஆய்வுசெய்து எழுதினார்.

படைப்புகள்

- வள்ளுவரும் மகளிரும்
- அன்பு முடி
- கால்டுவெல் ஒப்பிலக்கணம்
- தமிழா நினைத்துப்பார்
- நீங்களும் சுவையுங்கள்
- வள்ளுவர் கண்ட நாடும் காமமும்
- பிறந்தது எப்படியோ?
- கானல்வரி
- சமணத்தமிழ் இலக்கிய வரலாறு
- கல்விச் சிந்தனைகள்
- தமிழ் மணம்
- தமிழும் பிற பண்பாடும்
- வாழும் கலை
- தமிழ் மொழி வரலாறு
- தமிழ் இலக்கிய வரலாறு

- மொழியியல் விளையாட்டுக்கள்
- பத்துப்பாட்டு ஆய்வு
- குடிமக்கள் காப்பியம்,
- பிறந்தது எப்படியோ,
- தமிழா நினைத்துப்பார்
- சமணத் தமிழிலக்கியம்
- குசேலர்.
- அச்சொற்கள்
- மனோதத்துவ சாத்திரம்

ஆங்கில நூல்கள்

- A History of Tamil Language
- A History of Tamil Literature
- Philosophy of Thiruvalluvar
- Advaita in Tamil
- Tamil - A Bird's eye view

தமிழறிஞர் அறிமுகம்

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்

https://siliconshelf.wordpress.com/2014/12/03/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D-5-%E0%AE%A4%E0%AF%86-%E0%AE%AA%E0%AF%8A/

பிறப்பு: 08-01-1901, இறப்பு: 27-08-1980



இவரைப் போல இன்னொரு மகன் எனக்கு கிடைப்பானா என தமிழே ஏங்குமளவிற்கு ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்று தன் பணிகளால்

தமிழுக்கு பெருமையும் புகழையும் ஈட்டித் தந்தவர். பன்மொழிப் புலவர்,பல்கலை வித்தகர். சங்க இலக்கிய வரலாற்றை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக படைத்தவர். தன் முப்பத்தி ஆறாம் வயதிலேயே பன்மொழிப் புலவர் எனும் பட்டம் ஈன்ற பெருமகனார் தென்பட்டினம் பொன்னுசாமி மீனாட்சிசுந்தரனார்.

சென்னையை அடுத்த தென்பட்டினம் எனும் கடற்கரை கிராமத்தில் பிறந்தவர். தந்தையார் **பொன்னுசாமி கிராமணியார்.** இவரே ஒரு பழுத்த அறிஞர், **அஷ்டாவதானம் சுப்புராய செட்டியாரின்** மாணவர். இதனாலேயே தனது குருவின் குருவான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மீது இவருக்கு மாறாத காதல் கிளைத்தது. இதனாலேயே தனக்கு பிறந்த ஆண் மகவுக்கு மீனாட்சிசுந்தரம் என்றே பெயரிட்டார். இதன் காரணமாகவோ என்னவோ சிறுவன் மீனாட்சிசுந்தரத்துக்கும் தமிழின் மீது தணியாத காதல். அது மட்டுமல்லாமல் வளர்ந்து வரும் பருவத்தில் அவரது தமிழறிவை வளர்க்க **வடிவேலு செட்டியார், கோவிந்தராச முதலியார்,** மற்றும் **திருமணம் செல்வகேசவராய முதலியார்** போன்ற தமிழறிஞர்கள் பெரிதும் உதவினர்.

வரலாறு, அரசியல், சட்டம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர். தமது இடையறாத முயற்சியால் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், சமயம், தத்துவம், ஒப்பிலக்கியம், காந்தியியல் முதலிய பல்வேறு துறைகளில் கற்றுத் தேர்ந்து அனைவரும் வியக்கும் வகையில் இணையற்ற அறிஞர் ஆனார். எதைக் கற்றாலும் அதில் முடி முதல் ஆழம் வரை கற்று அதில் புலமையும் வியத்தகு ஆற்றலும் அடையப் பெற்ற மீனாட்சியாரின் அறிவும் புலமையும் வேறொருவர் எளிதில் நெருங்க இயலாதது. அதன் காரணமாகவே பலவேறு துறைகளின் தலைமைப் பதவிகள் அவரைத் தேடி வந்து அரியணையிட்டு அமரச் சொல்லி கெஞ்சிக் கொண்டன.

எல்லாத் துறைதோறும் தலைவர் ஆவது என்பது எத்தனை சிரமம் மிக்கது என்பதை ஏதெனும் ஒருதுறையில் தலைவர் ஆகுபவரால் மட்டுமே உணர முடியும். அவர் எண்ணற்ற மொழிகளைக் கற்றிருந்தாலும் ஈராயிரம் ஆண்டு தமிழ் மொழியிலும் இலக்கியங்களிலும் அவர் பெற்ற புலமைக்கு ஈடில்லை. மொழியின் மீது அவர் கொண்ட மாறாத ஆர்வமும் மாசற்ற காதலுமே இதற்கு காரணம்.

1920ல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ., 1922ல் பி.எல். பட்டம், 1923ல் எம்.ஏ. பட்டம், பின் வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில்

தொடர்ச்சியான முதுகலைப் பட்டம் என தன் கல்விப் பயணத்தை சாதனைப் பயணமாக மேற்கொண்டவர்.

1924ல் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1925ல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார். தமிழ் இலக்கிய இலக்கண ஆர்வத்தால் 1934க்குள் பி.ஓ.எல், எம்.ஓ.எல். பட்டங்களும் பெற்றார். 1941ல் நாட்டு உரிமைக்காக மறியல் செய்து சிறை சென்றார்.

இவரது தமிழ்ப் புலமையால் மையல் கொண்ட அண்ணாமலை அரசர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இவரைப் பேராசிரியராக பணி செய்ய அழைப்பு விடுத்தார். 1944 முதல் 1946 வரை அங்குப் பணியாற்றினார். மீண்டும் 1958ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். அது மட்டுமல்லாமல் சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1961ல் தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்று தமிழுக்கு சிறப்பு சேர்த்தார். மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் 1966 முதல் 1971 வரை பணியாற்றினார்.

அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் புகழ் பரப்பிய பெருமகனார் தெ.பொ.மீ. யுனெஸ்கோவின் “கூரியர்” என்னும் இதழ்க் குழுவின் தலைவராக விளங்கிய இவர், ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் எனில் மிகையில்லை. மொழியியல் என்ற புதிய துறையின் புதுமையைத் தமிழுக்குக் கொண்டுவந்து அதை வளர வைத்த முதல் முன்னோடி பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.தான்.

தமிழிலக்கிலக்கியம் குறித்து இவர் எழுதிய பல ஆய்வு நூல்கள் இன்றும் என்றும் தமிழுக்கு அழியா சொத்து ஆகும். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை “நாடகக் காப்பியம்” என்றும் “குடிமக்கள் காப்பியம்” என்றும் ஒரு வரியில் கூறியவர். சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை.


ஆர்வியின் குறிப்பு: பத்மபூஷண் விருது பெற்றவர். ஒரு காலத்தில் பிரபல நாடக ஆசிரியராக இருந்த (பதிபக்தி, பம்பாய் மெயில், கதரின் வெற்றி மற்றும்

பல நாடகங்களை எழுதியவர்) **தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர்** இவரது அண்ணா.

ஆசிரியர்:தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%A4%E0%AF%86._%E0%AE%AA%E0%AF%8A._%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D


பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்பட்ட தெ. பொ. மீனாட்சிசுந்தரம் 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களுள் ஒருவர். இவர் சமசுகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, செருமன் போன்ற பல மொழிகளை அறிந்தவராய் இருந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், ஒப்பிலக்கியம், மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும், நூல்களையும், திறனாய்வுகளையும் எழுதியுள்ளார்.



சமணத்
தமிழ் இலக்கிய வரலாறு


ஆசிரியர் :
பல்கலைச் செல்வர்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,
தமிழ்த் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கலைக்கதிர் வெளியீடு, கோவை-1.



அன்பு முடி

தெ. பொ. மீனாட்சிசுந்தரன் M.A., B.L., M.O.L.




சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடு :— 9.

மனோதத்துவ சாத்திரம்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி
முதல் நூற்றாண்டு விழாப் பதிப்பு
1946. [விலை ரூ. 5/-



தமிழா நினைத்துப்பார்!
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

தெ. பொ. மீ.
வெள்ளி விழா
வெளியீடு


பதிப்பாசிரியர் :
ம. ரா. அப்பாத்துரை, பி.ஏ.,
13. முத்தியாலு செட்டித் தெரு.
புரசைப்பாக்கம், சென்னை—7
[விலை ரூ. 3




தமிழும் பிற பண்பாடும்
டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை—600 098.



சம்பந்தரும் சமணரும்
ஆசிரியர்:
பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
ருத்திரா பதிப்பகம்
சென்னை-1.



குடிமக்கள் காப்பியம்
பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுரத் தெரு.
மதுரை-1



குலசேகரர்
தெ.பொ.மீ

இலக்கிய/தமிழியல் பணி

கலைக்களஞ்சியம்

தெ, பொ. மீனாட்சிசுந்தரம் கலைக்களஞ்சியத்தில் தமிழ் எழுத்தியல், மொழியியல், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் 88 கட்டுரைகள் எழுதினார்.

இலக்கிய ஆய்வு

தெபொமீ 'கலாநிலையம்', 'விவேக சூடாமணி', 'லோகோபகாரி', 'நவசக்தி' ஆகிய இதழ்களில் இலக்கியம், மொழியியல், தத்துவம் பற்றிய கட்டுரைகளை எழுதினார். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை "நாடகக் காப்பியம்" என்றும் "குடிமக்கள் காப்பியம்" என்றும் வரையறுத்தார்.

திருக்குறள் பற்றி 'வள்ளுவரும் மகளிரும்' ' 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' ஆகிய நூல்களை எழுதினார்

'தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவை' என்ற நூலில் தமிழ்நாட்டுச் சடங்குகளுக்கும், தாய்லாந்து நாட்டு சடங்குகளுக்கும் உள்ள ஒற்றுமையை இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளோடு விளக்கினார். தாய்லாந்தின் ஊஞ்சல் திருவிழா தமிழ்நாட்டின் பாவை நோன்புடனும் திருவெம்பாவை, திருப்பாவையுடனும் தொடர்புடையது என்பதை சான்றுகளுடன் நிறுவினார்.

மொழியியல்

தமிழில் மொழியியல் துறையின் முன்னோடியாகக் கருதப்படும் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் மொழியியல் நோக்கில் மொழியை அணுகி ஆராயும்போது மொழியின் கட்டமைப்பையும் அது சமுதாயத்தில் வழங்கி வரும் முறையையும் காணலாம் என்பதைத் தன் ஆய்வுகளின் மூலம் அறியச் செய்தார்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் இலக்கண வரலாற்றை வடமொழி இலக்கணம், தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் தாக்கத்தின் அடிப்படையில் ஆய்வுசெய்தார்.

தெபொமீ தமிழ் மொழி எழுத்துக்களை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றியும், திருத்தியும், குறைத்தும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

"Rhythm of the common speech; Glorification by Bharathi" என்ற நூலில் பாரதியின் மொழிநடை தமிழ் மரபிலிருந்து எதைப் பெற்றுக்கொண்டது என்பதைஆராய்கிறார்.

நோம் சோம்ஸ்கியின்(Noam Chomsky) மாற்றிலக்கணம் (transformational grammar) என்ற கோட்பாட்டை தமிழுக்கு அறிமுகம் செய்யும் முகமாக தமிழ் எடுத்துக்காட்டுகளுடன் 'மாற்றிலக்கணம்'[2] என்ற நூலை எழுதினார்.

அறிவியல் தமிழ்

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் வழிக் கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தார். ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கை போன்ற அறிவியல் தத்துவங்களைத் தமிழில் எழுதினார்.

பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்

https://groups.google.com/g/mintamil/c/ZQt5q-Q3bck



Kannan Natarajan

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் 1901ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள் தமிழுலகம் ஒரு தவப்புதல்வனைக் கண்டெடுத்தது. ஆம்! அந்த நாள்தான்

தெ.பொ.மீ. உலகைக் கண்திறந்து பார்த்த நாள். சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் தமிழ்ப்பற்றும், இறைப்பற்றும் ஒருங்கே பெற்ற பொன்னுசாமி கிராமணியார் இவரை மகவாகப் பெற்ற நாள். தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் தெ.பொ.மீ.யின் இடத்தை இன்னொருவரால் நிரப்ப முடியாது என்பது முற்றிலும் உண்மை.

பொன்னுசாமி கிராமணியாருக்குத் தமிழின் மீதும் தமிழறிஞர்களின் மீதும் இருந்த காதலால்தான் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பெயரைத் தன் மகவுக்கு இட்டார். இவர் தெ.பொ.மீ. எனத் தமிழுலகில் அழைக்கப்பெற்றவர். இவரது தமையனார் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், நாடகத்தின் வாயிலாக நாட்டிற்கு உழைத்த தொண்டர். தெ.பொ.மீ.யும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் புகழ் பெற்றவர். சென்னை மாநகராட்சியிலும், பல்வேறு துறைகளில் தலைவராகவும், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், மகரிஷி மகேஷ்யோகியின் அமைப்பைத் தென்னாட்டில் பரப்பும் பணிக்குப் பொறுப்பாளராகவும் பணியாற்றித் தமது நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தியவர்.

தமிழக அரசால் "கலைமாமணி" விருதையும் மத்திய அரசால் "பத்மபூஷண்" விருதையும் பெற்ற பேராசிரியர் தெ.பொ.மீ.

வரலாறு, அரசியல், சட்டம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர். தமது இடையறாத முயற்சியால் தமிழ்

- இலக்கியம்
- இலக்கணம்
- மொழியியல்
- சமயம்
- தத்துவம்
- ஒப்பிலக்கியம்
- காந்தியியல்

முதலிய பல்வேறு துறைகளில் கற்றுத்தேர்ந்து அனைவரும் வியக்கும் வகையில் இணையற்ற அறிஞர் ஆனார். அதோடன்றி பல்வேறு பரிணாமங்களால் துறைதோறும் தலைவர் ஆனார். எதைக் கற்றாலும் கசடறக் கற்றமையால் எல்லாத்துறையும் தலைமைத் தன்மை கொடுத்து அவரைப் போற்றியது. பதினெட்டு மொழிகளைக் கற்றிருந்தாலும் ஈராயிரம் ஆண்டு தமிழ் மொழியிலும் இலக்கியங்களிலும் அவர் பெற்ற புலமைக்கு

ஈடில்லை. மொழியின் மீது அவர் கொண்ட நேசிப்பும் வாசிப்புமே இதற்குக் காரணம்.

1920ல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்று 1922ல் பி.எல். பட்டமும் பெற்றார். பெரும்பாலும் சட்டம் பயின்ற வல்லுநர்கள் தமிழார்வலர்களாக இருந்தமையை தமிழ் வரலாறு காட்டும். அவர்களுள் தெ.பொ.மீ.யும் ஒருவர்.

1923ல் எம்.ஏ. பட்டம் பெற்றார். வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 1923ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக தன்னைப் பதிவு செய்து கொண்டார். எனினும் தமிழ் கற்பிக்கும் பேராசிரியராகவே இவர் பணி பின்னாளில் தொடர்ந்தது.

1924ல் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1925ல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார். தமிழ் இலக்கிய இலக்கண ஆர்வத்தால் 1934க்குள் பி.ஓ.எல், எம்.ஓ.எல். பட்டங்களும் பெற்றார். 1941ல் நாட்டு உரிமைக்காக மறியல் செய்து சிறை சென்றார்.

இவரது தமிழ்ப் புலமையைக் கண்ட அண்ணாமலை அரசர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இவரைப் பேராசிரியராக நியமித்தார். 1944ல் பேராசிரியராகப் பொறுப்பேற்ற தெ.பொ.மீ. 1946ம் ஆண்டு வரை அங்கு பணியாற்றினார்.

மீண்டும் 1958ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். இவரது தமிழ்ப்புலமையை உலகுக்கு அடையாளம் காட்டிய பெருமை, அண்ணாமலை அரசரையே சாரும். மொழிப்புலமை இவரை அயல்நாட்டுப் பல்கலைக்கழகமான சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1961ல் தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்க வைத்தது.

1973,74ம் ஆண்டுகளில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளராக பொறுப்பேற்றார். 1974 முதல் ஆழ்நிலைத் தியானத் தேசியக் குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டு செய்துள்ளார்.

தருமபுர ஆதீனம் "பல்கலைச் செல்வர்" என்றும், குன்றக்குடி ஆதீனம் "பன்மொழிப் புலவர்" என்றும் விருதுகள் அளித்துச் சிறப்பித்தன.

அமெரிக்கா, ஜப்பான், இரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் புகழ் பரப்பிய பெருமகனார் தெ.பொ.மீ. யுனெஸ்கோவின் "கூரியர்" என்னும் இதழ்க்குழுவின் தலைவராக விளங்கிய இவர், ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் எனில் மிகையில்லை.

தமிழ் படித்தவர்கள் தமிழ்மொழியை மட்டுமே கற்க முடியும், பிற மொழிகள் அவர்களுக்கு வராது என்பதை மாற்றி, மொழியியல் என்ற புதிய துறையின் புதுமையைத் தமிழுக்குக் கொண்டுவந்து அதை வளர வைத்த முதல் முன்னோடி பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.தான். தமிழ்மொழியின் மரபு சிதையாமல், மாண்பு குறையாமல், மாசுநேராமல் நவீனப்படுத்தி உலகை ஏற்றுக் கொள்ளச் செய்த தமிழ்த்தொண்டர் தெ.பொ.மீ. உலகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் மதிக்கப்பட்டு, பட்டங்களையும் பாராட்டுகளையும் பெற்ற பெருந்தகை.

"தமிழின் முக்கியத்துவம், அது பழமைச் சிறப்பு வாய்ந்த ஒரு செவ்வியல் மொழியாக இருப்பதுடன் அதே வேளையில் வளர்ந்து வரும் நவீன மொழியாகவும் ஒருங்கே விளங்குவதில்தான் சிறப்புப் பெறுகிறது," என்பது பன்மொழிப் புலவரான தெ.பொ.மீ.யின் கருத்து.

செவ்வியல் மொழியான தமிழுக்கு நாம் செய்திருக்க வேண்டிய பணி குறித்து தெ.பொ.மீ, "ஏராளமாகத் தமிழில் படைக்கப்பட்டுள்ள படைப்புகள் பிற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப் படாமையால் பரவலாக அறிஞருலக ஆய்வுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன," என்று செவ்வியல் மொழியான தமிழுக்கு நாம் செய்திருக்க வேண்டிய பணியை நினைவூட்டியுள்ளார்.

இவர் மிகச் சிறந்த இலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்கியவர். தமிழுக்குப் பல புதிய சிந்தனைகளைத் தன் ஆய்வின் மூலம் தந்தவர். ஆராய்ச்சி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர்தம் நூல்கள் காட்டுகின்றன. இதனால் அவர் **"மின்வெட்டுப் பேராசிரியர்"** என்றே பிறரால் அழைக்கப்பட்டார். இலக்கியத் துறையில் இருட்டாக இருந்த இடங்களைத் தன்னுடைய பேரறிவால், திறனாய்வுப் பார்வையில் விளங்கச் செய்தவர் தெ.பொ.மீ. திறனாய்வுத் துறையில் பல புதிய தடங்களைப்

பதித்தவர். **"ஒரு மொழியின் இலக்கியத்தைச் சிறந்தது எனச் சொல்ல வேண்டுமானால், பிறமொழி இலக்கியங்களைப் பற்றிய அறிவும், சிறப்பெனக் குறிப்பிடும் இலக்கியத்தின் மொழியில் நுண்மாண் நுழைபுலமும் பெற்றிருக்க வேண்டும். பிறவற்றை அறியாமலோ, தன்னுடையதை முழுமையாக உணராமலோ புதிய தடங்களைக் காண முடியாது,"** என்று கூறியுள்ளார் தெ.பொ.மீ.

உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை "நாடகக் காப்பியம்" என்றும் "குடிமக்கள் காப்பியம்" என்றும் ஒருவரியில் கூறியவர். சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை.

"தமிழ்மொழி உயர வேண்டுமானால் தமிழன் உயரவேண்டும்," எனச் சங்க நாதமிட்ட முதல் சான்றோர் தெ.பொ.மீ. தன்னலம் கருதாத மாமனிதர் தெ.பொ.மீ. இவரது எழுத்துகள் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் பெருமையும் புகழும் சேர்ப்பன.

முனைவர் மு.வள்ளியம்மை
நன்றி: தமிழ்மணி (தினமணி)

தமிழ் இலக்கிய வரலாறு (தெ. பொ. மீ நூல்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D_%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81_(%E0%AE%A4%E0%AF%86._%E0%AE%AA%E0%AF%8A._%E0%AE%AE%E0%AF%80_%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D)

இலக்கிய வரலாறு	
நூல் பெயர்:	தமிழ் இலக்கிய வரலாறு
ஆசிரியர்(கள்):	தெ.பொ.மீனாட்சிசுந்தரன்
வகை:	மொழி
துறை:	வரலாறு
இடம்:	மதுரை 625 010

மொழி:	தமிழ்
பக்கங்கள்:	258
பதிப்பகர்:	தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் நினைவு அறக்கட்டளை
பதிப்பு:	2000
ஆக்க அனுமதி:	தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் நினைவு அறக்கட்டளை

தமிழ் இலக்கிய வரலாறு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல் ஆகும். இது ஆங்கிலத்திலிருந்து மு.இளமாறன் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழ் இலக்கிய வரலாற்றை இந்நூல் ஆராய்கிறது.

அமைப்பு

இந்நூல் பொதுக்குறிப்புகள், சங்கப் பாடல்கள், இரட்டைக் காப்பியங்கள், நீதி இலக்கியம், ஆழ்வார்களும் நாயன்மார்களும், சமணக் காப்பியங்களும், சோழர் காலக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பிந்திய இலக்கியப் போக்குகள், புதுமைக்காலம் என்ற பல்வேறு தலைப்புகளில் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்கிறது. இந்நூலில் ஆங்கில மூலப்பதிப்பின் முகவுரையும், மொழிபெயர்ப்பாளர் முன்னுரையும் உள்ளது.

தெ.பா.மீனாட்சி சுந்தரனார்

https://www.tnpsc.academy/unit/10-2-%E0%AE%A4%E0%AF%86-%E0%AE%AA%E0%AE%BE-%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0/?srsltid=AfmBOooczB2X2-9Jv9q8qR8Fhnp6nkIIMM4_mCUttMfQQ3YC5ZarqDbe

சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் பொன்னுச்சாமி கிராமணி என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.

· பிறப்பு 08-01-1901 இறப்பு 28-08-1980

· 1916 அரிஜனங்களுக்கு இரவுப் பள்ளி செயல்படுத்தினார்.

· 1920 பி.ஏ. பட்டம்

· 1922 பி.எல். பட்டம்

· 1924 எம்.ஏ. (வரலாறு) பட்டம் மேலும் எம்.ஓ.எல்.பட்டம் பெற்றார்.

· 1923 சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்.

· 1925 அலுமினியத்தொழிலாளர் சங்கத் தலைவர்.

· 1936 வேதாந்த சங்கத் தலைவர்.

· 1944 நாட்டு விடுதலைக்காக போராடி சிறை சென்றார்.

· 1944-1946 அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர். 1958-ல் துறைத் தலைவரானார்.

· 1947 மாண்டிசோரி பள்ளியை நிறுவினார்.

· 1961 சிகாகோ பல்கலைக் கழகம் தமிழ்க் கல்வி தொடங்கியபோது தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

· 1973-1974 திருவேங்கடம் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியின் சிறப்பாய்வாளராகப் பணி.

டி.லிட். பட்டங்கள்

· 1967-ல் மதுரைப் பல்கலைக் கழகம்.

· 1976-ல் இலங்கைப் பல்கலைக் கழகம்.

· 1979-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கியது.

· 1977 பத்மபூசன் விருது, 1978 கலைமாமணி பட்டம்.

· அனைத்திந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தொடங்கியவர். தனது இறுதி வரை அதன் துறைத் தலைவராக இருந்தார்.

· நடமாடும் பல்கலைக் கழகம் என திரு.வி.க. பாராட்டியுள்ளார்.

பட்டங்கள்

· பல்கலைச் செல்வர் – திருவாவடுதுறை ஆதீனம்

· பன்மொழிப்புலவர் (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன்) – குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் (அழகப்பச் செட்டியார் தலைமை)

· பெருந்தமிழ் மணி – சிவபுரி சன்மார்க்க சபை (தலைமை முதலமைச்சர் காமராசர்)

இவரது நூல்கள்

· கால்டுவெல் ஒப்பிலக்கணம் – அடிச்சொற்கள் (மொழி பெயர்ப்பு)

· மனோ தத்துவ சாத்திரம்

· சமணத்தமிழ்

· கல்விச் சிந்தனைகள்

· வள்ளுவரும் மகளிரும்

· அன்பு முடி

· தமிழா நினைத்துப்பார்

· பிறந்தது எப்படியோ?

· நீங்களும் சுவையுங்கள்

· கானல் வரி

· இலக்கிய வரலாறு

· தமிழ் மணம்

· வள்ளுவர் கண்ட நாடும் காமமும்

· வாழும் கலை

· மொழியியல் விளையாட்டுகள்

· பத்துப்பாட்டு ஆய்வு

· தமிழும் பிற பண்பாடும் என்பன.

ஆங்கிலநூல்கள்

· A History of Tamil Language

· A History of Tamil Literature

· Advaita in Tamil

· Tamil – A Bird's eye view

தமிழ் இணையக் கல்விக்கழகம்
தமிழ் வளர்ச்சித் துறை


தெ.பொ. மீனாட்சிசுந்தரம்

ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பெயர்	தெ.பொ. மீனாட்சிசுந்தரம்
புனைபெயர்கள்	பன்மொழிப்புலவர்
பிறந்த ஆண்டு	1901, ஜனவரி 8
பெற்றோர்	பொன்னுசாமி
பணி	வழக்கறிஞர், தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திராவிட மொழியியல் உயராய்வு மைய இயக்குநர், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், சிகாகோ பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக்கழகத் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளர்
பதவிகள்	யுனெஸ்கோ கூரியர் தமிழ் பத்திரிகை ஆசிரியர், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர், சென்னைத் தமிழ்ச்சங்க நிறுவனர், அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவர், வேதாந்த சங்கத் தலைவர், ஆழ்நிலைத் தியானத் தேசியக் குழு உறுப்பினர்
குறிப்பிடத்தக்க படைப்புகள்	குடிமக்கள் காப்பியம், தமிழா நினைத்துப்பார், சமணத் தமிழிலக்கியம்
பிறந்த ஊர்	சிந்தாதிரிப்பேட்டை
மாவட்டம்	சென்னை
மாநிலம்	தமிழ்நாடு


நாடு	இந்தியா
விருதுகள் / பட்டங்கள்	பத்மபூஷன் விருது, கலைமாமணி விருது, சாகித்திய அகாதெமி விருது, பன்மொழிப் புலவர், பல்கலைச் செல்வர்
நாட்டுடைமை ஆண்டு	2007
இறப்பு	1980, ஆகஸ்டு 27
இறந்த ஊர்	சென்னை

எழுதிய நூல்கள்


கல்விச் சிந்தனைகள்
பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சேகர் பதிப்பகம்
30, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-1.

கல்விச் சிந்தனைகள்


நாட்டுடைமை
நூல்கள்



சம்பந்தரும் சமணரும்



அன்பு முடி சேக்கிழார்பெற்ற எறி....

வள்ளுவர் கண்ட நாடும்-காமமும்

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம்
சென்னை-5. :: தெப்பக்குளம்
திருச்சி-2.

வள்ளுவர் கண்ட நாடும் காமமும்

சமணத்
தமிழ் இலக்கிய வரலாறு

ஆசிரியர் :

பல்கலைச் செல்வர்

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,

எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,

தமிழ்த் துறைத் தலைவர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கலைக்கதிர் வெளியீடு, கோவை-1.

சமணத் தமிழ் இலக்கிய வரலாறு

சமணத் தமிழ் இலக்கிய வரலாறு

ஆசிரியர் :

பல்கலைச் செல்வர்

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,


எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,

தமிழ்த் துறைத் தலைவர்,


அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கலைக்கதிர் வெளியீடு, கோவை-1.

சமணத் தமிழ் இலக்கிய வரலாறு



Prof. T. P. Meenakshisundaran ....




தேனிப்பு ஏன்? எது? என்ன? எப்பட....


தமிழ் மணம்

பன்மொழிப் புலவர்
பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுரத் தெரு :: மதுரை-1



குலசேகரர்




[Aesthetics of the Tamils]

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

வள்ளுவரும் மகளிரும்

சர்வோதய இலக்கியப் பண்ணை
மதுரை-625 001
1978

வள்ளுவரும் மகளிரும்



சம்பந்தரும் சமணரும்

ஆசிரியர் :

பேராசியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ருத்திரா பதிப்பகம்

சென்னை-1.

சம்பந்தரும் சமணரும்

நற்றிணை நாடகங்கள்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி
&
சேப்பாக்கம்
சென்னை-5

நற்றிணை நாடகங்கள்

சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடு :- 9.

மனோதத்துவ சாத்திரம்

கெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி

முதல் நூற்றாண்டு விழாப் பதிப்பு

1946.

[விலை ரூ. 5/-

சூளாமணி

1-237 பாடல்கள்

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்

உரைநடை

1944

தமிழும் பிற பண்பாடும்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை—600 098.


கவிஞர்
இரவீந்திரநாத தாகூர்

நூற்றுண்டு விழா வெளியீடு

பேராசிரியர்
தெ. பொ. மீனுட்சிசுந்தரன்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்
அண்ணுமலைநகர்

கவிஞர் இரவீந்திரநாத தாகூர் நூற....



சயாமில்

திருவெம்பாவை திருப்பாவை

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

திருவெம்பாவை திருப்பாவை

குடிமக்கள் காப்பியம்

(சிலப்பதிகார ஆராய்ச்சி)

பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

குடிமக்கள் காப்பியம் சிலப்பதிக....



தமிழ்க்களஞ்சியம் கலைக்களஞ்சியக....

தமிழா நினைத்துப்பார்!

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

தெ. பொ. மீ.
வெள்ளி விழா
வெளியீடு

பதிப்பாசிரியர் :
ம. ரா. அப்பாத்துரை, பி.ஏ.,
13, முத்தியாலு செட்டித் தெரு,
புரசைப்பாக்கம், சென்னை—7

[விலை ரூ. 3



கானல் வரி

தமிழக வரலாற்றில் முத்திரை பதித்தவர்கள்

தெ.பொ.மீ. அவர்கள்

https://suriyodayamtamil.blogspot.com/2020/08/blog-post_607.htm



இவரைப் போல இன்னொரு மகன் எனக்கு கிடைப்பானா என தமிழே ஏங்குமளவிற்கு ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்று தன் பணிகளால் தமிழுக்கு பெருமையும் புகழையும் ஈட்டித் தந்தவர். பன்மொழிப் புலவர்,பல்கலை வித்தகர். சங்க இலக்கிய வரலாற்றை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக படைத்தவர். தன் முப்பத்தி ஆறாம் வயதிலேயே பன்மொழிப் புலவர் எனும் பட்டம் ஈன்ற பெருமகனார் தென்பட்டினம் பொன்னுசாமி மீனாட்சிசுந்தரனார்.

பிறப்பு: ஜனவரி 8, 1901

இறப்பு: ஆகஸ்ட் 27,1980

பெற்றோர்: மொழிப் புலமை: தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இன்தி, பிரெஞ்சு, ஜெர்மன்.

சிறப்புப் பெயர்: தெ.பா.மீ. பன்மொழிப் புலவர்

தொழில்: தமிழ்ப் பேராசிரியர், எழுத்தாளர்

கல்வி: பி.ஏ., பி.எல்., எம்.ஏ, எம்ஓஎல்

இலக்கிய வகை கருப்பொருட்கள்: தமிழிலக்கியம் வரலாறு மொழியியல்

விருதுகள்: கலைமாமணி, பத்மபூசன்

தெ.பொ.மீனாட்சிசுந்தரம் தமிழகம் சென்னை சிந்தாரிப்பேட்டையில் 1901 ஆம் ஆண்டு ஜனவரி 8 ம் நாள் பொன்னுசாமி கிராமணியாருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தைக்கு தமிழ் மீதும் தமிழ் அறிஞர்கள் மீதும் இருந்த பற்றினால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பெயரை மகனுக்கு இட்டார்.

வரலாறு, அரசியல், சட்டம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர். தமது இடையறாத முயற்சியால் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், சமயம், தத்துவம், ஒப்பிலக்கியம், காந்தியியல் முதலிய பல்வேறு துறைகளில் கற்றுத் தேர்ந்து அனைவரும் வியக்கும் வகையில் இணையற்ற அறிஞர் ஆனார். எதைக் கற்றாலும் அதில் முடி முதல் ஆழம் வரை கற்று அதில் புலமையும் வியத்தகு ஆற்றலும் அடையப் பெற்ற மீனாட்சியாரின் அறிவும் புலமையும் வேறொருவர் எளிதில் நெருங்க இயலாதது. அதன் காரணமாகவே பலவேறு துறைகளின் தலைமைப் பதவிகள் அவரைத் தேடி வந்து அரியணையிட்டு அமரச் சொல்லி கெஞ்சிக் கொண்டன.

எல்லாத் துறைதோறும் தலைவர் ஆவது என்பது எத்தனை சிரமம் மிக்கது என்பதை ஏதெனும் ஒருதுறையில் தலைவர் ஆகுபவரால் மட்டுமே உணர முடியும். அவர் எண்ணற்ற மொழிகளைக் கற்றிருந்தாலும் ஈராயிரம் ஆண்டு தமிழ் மொழியிலும் இலக்கியங்களிலும் அவர் பெற்ற புலமைக்கு ஈடில்லை. மொழியின் மீது அவர் கொண்ட மாறாத ஆர்வமும் மாசற்ற காதலுமே இதற்கு காரணம்.

1920ல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ., 1922ல் பி.எல். பட்டம், 1923ல் எம்.ஏ. பட்டம், பின் வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியான முதுகலைப் பட்டம் என தன் கல்விப் பயணத்தை சாதனைப் பயணமாக மேற்கொண்டவர்.

1920: பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார்

1922: பி.எல். பட்டம் பெற்றார்.

1923: எம்.ஏ. பட்டம் பெற்று, வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1923: சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

1924: சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1925: அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார்.

1934: தமிழ் இலக்கிய இலக்கண ஆர்வத்தால் பி.ஓ.எல், எம்.ஓ.எல். பட்டங்களும் பெற்றார்.

1941: நாட்டு உரிமைக்காக மறியல் செய்து சிறை சென்றார்.

1944: இவரது தமிழ்ப் புலமையைக் கண்ட அண்ணாமலை அரசர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியராக நியமித்தார். பேராசிரியராகப் பொறுப்பேற்ற தெ.பொ.மீ. 1944 முதல் 1946 வரை அங்குப் பணியாற்றினார்.

1958: 1958: மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.

1961: இவரது மொழிப்புலமையால் அயல்நாட்டுப் பல்கலைக்கழகமான சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.

1966: மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக 1966 முதல் 1971 வரை பணியாற்றினார்.

1973,74: திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளராக பொறுப்பேற்றார்.

1974: ஆழ்நிலைத் தியானத் தேசியக் குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டு செய்துள்ளார்.

விருதுகள்: இவருக்குத் தருமபுர ஆதீனம் "பல்கலைச் செல்வர்" என்றும், குன்றக்குடி ஆதீனம் "பன்மொழிப் புலவர்" என்றும் விருதுகளும், தமிழக அரசின் சார்பில் கலைமாமணி விருதையும், இந்திய அரசின் சார்பில் பத்மபூசன் விருதையும் அளித்துச் சிறப்பித்தனர்...

அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் புகழ் பரப்பிய பெருமகனார் தெ.பொ.மீ. யுனெஸ்கோவின் “கூரியர்” என்னும் இதழ்க் குழுவின் தலைவராக விளங்கிய இவர், ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் எனில் மிகையில்லை. மொழியியல் என்ற புதிய துறையின் புதுமையைத் தமிழுக்குக் கொண்டுவந்து அதை வளர வைத்த முதல் முன்னோடி பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.தான்.

தமிழிலக்கிலக்கியம் குறித்து இவர் எழுதிய பல ஆய்வு நூல்கள் இன்றும் என்றும் தமிழுக்கு அழியா சொத்து ஆகும். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை “நாடகக் காப்பியம்” என்றும் “குடிமக்கள் காப்பியம்” என்றும் ஒரு வரியில் கூறியவர். சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை.

ஆர்வியின் குறிப்பு: பத்மபூஷண் விருது பெற்றவர். ஒரு காலத்தில் பிரபல நாடக ஆசிரியராக இருந்த (பதிபக்தி, பம்பாய் மெயில், கதரின் வெற்றி மற்றும் பல நாடகங்களை எழுதியவர்) தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் இவரது அண்ணா.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு சீவக சிந்தாமணி பதிப்பு, அவரது ஆராய்ச்சிக்காக தேவைப்பட்டது. பல நூலகங்களில் தேடினார். உ.வே. சாமிநாதய்யர் 1883-ம் ஆண்டில் பதிப்பித்தது. எனவே அது கிடைக்கவில்லை. பேராசிரியர் வையாபுரி பிள்ளையிடம் சென்று கேட்டார். அது அவரிடமும் இல்லை. ஆனால் "உ.வே.சாமிநாதையரிடம் உள்ளது. கேட்டுப் பாருங்கள். ஆனால் கிடைப்பது சிரமம்.." என்று அவர் சொன்னார்.

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் திருவல்லிக்கேணியில் இருந்த உ.வே சாமிநாத அய்யர் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தார். அவரிடம், தன் தேவையைச் சொன்னார். அதற்கு ஐயர், "நான் சீவக சிந்தாமணியை மறுபதிப்பு போட ஏற்பாடு செய்து வருகிறேன். அதற்கு பதிப்பில் குறிப்புகள் எழுதி உள்ளேன். அது மறுபதிப்பு நூலுக்குத் தேவைப்படுகிறது. மூன்று மாதத்திற்குள் புதுப்பதிப்பு வந்து விடும்" என்றார்.

நூல் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. பேராசிரியர் தெ.பொ.மீ. விடை பெற்றுக் கொண்டு புறப்படத் தயாரானார். அப்போது, "தம்பி, பெயர் என்ன?" என்று கேட்டார் ஐயர்.

"மீனாட்சி சுந்தரம்"

"என் ஆசிரியர் பெயரைக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கு இல்லை என்று எப்படிச் சொல்வது?" என்று உள்ளே சென்று தான் குறிப்புகள் எழுதி வைத்திருந்த சீவக சிந்தாமணி முதல் பதிப்பைக் கொண்டு வந்து கொடுத்தார்.

இது ஆசிரியர்--மாணவர் என்ற அடிப்படையிலான உறவின் அடையாளம்.

-- சந்தியா பதிப்பகம் வெளியிட்டிருக்கும் சா. கந்தசாமி எழுத்தோவியங்கள் என்ற நூலிலிருந்து.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1901–1980) பன்மொழிப் புலமை பெற்ற தமிழறிஞர், மொழியியல் ஆய்வாளர் மற்றும் சிறந்த கல்வியாளர் ஆவார். பழந்தமிழ்ப் பண்பாட்டை மேலைநாட்டு ஆய்வுமுறைகளுடன் இணைத்து, தமிழ், ஆங்கிலம் என இருமொழிகளிலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் முக்கிய தமிழ்ப் பணிகள்:

- **மொழியியல் ஆய்வு:** தமிழ் மொழி வரலாற்றை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து, Tamil: A Bird's-eye View, History of Tamil Language போன்ற முக்கிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதினார்.
- **பல்கலைக்கழகப் பங்களிப்பு:** அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களில் மொழியியல் துறைகளை உருவாக்கி, நவீனத் தமிழாய்வை மேம்படுத்தினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தை உருவாக்கி, அதன் முதல் துணைவேந்தராகப் (1966-1971) பணியாற்றினார்.
- **படைப்புகள்:** தமிழிலும் ஆங்கிலத்திலும் பல இலக்கிய, வரலாற்று, மற்றும் இலக்கணக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- **சிறப்புகள்:** 'பன்மொழிப் புலவர்', 'பல்கலைச் செல்வர்' எனப் போற்றப்பட்டார். தமிழக அரசின் கலைமாமணி விருதையும், இந்திய அரசின் பத்மபூசண் விருதையும் பெற்றவர்.

தமிழியல் ஆய்வை புதிய தளங்களுக்கு எடுத்துச் சென்றவர்களில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1901–1980) 20-ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த தமிழறிஞர், மொழியியலாளர் மற்றும் கல்வியாளர் ஆவார். "பன்மொழிப் புலவர்" எனப் போற்றப்படும் இவர், சென்னை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் பணியாற்றியவர். தமிழ் மொழி வரலாறு, மொழியியல் மற்றும் இலக்கியத் துறைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர்.

முக்கிய தகவல்கள்:

- **பிறப்பு:** ஜனவரி 8, 1901, சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் பிறந்தார்.
- **சிறப்புப் பெயர்கள்:** பன்மொழிப் புலவர், தெ.பொ.மீ.
- **பணிகள்:** பேராசிரியர், தமிழறிஞர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்.
- **ஆராய்ச்சித் துறை:** தமிழ் மொழி வரலாறு, ஒப்பிலக்கியம், மொழியியல் (Linguistics).
- **படைப்புகள்:** "தமிழ் மொழி வரலாறு" உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- **மறைவு:** ஆகத்து 27, 1980.

சிறப்பம்சங்கள்:

- தமிழ், ஆங்கிலம் மட்டுமின்றி பிற மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால் "பன்மொழிப் புலவர்" என அழைக்கப்பட்டார்.
- தமிழ் இலக்கியத்தை நவீன மொழியியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்த முன்னோடி.
- கல்வியாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.

தமிழ் இலக்கியத்திற்கும் மொழியியலுக்கும் இவர் செய்த பங்களிப்புகள் ஈடுஇணையற்றவை.

காணொளிகள்

01] **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்**
https://www.youtube.com/watch?v=dc5RbrflUEc [16:09]

02] **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பற்றிய முழு தகவல்கள்**
https://www.youtube.com/watch?v=k1DiFVPOZyI [24:08]

03] **தெ. போ. மீனாட்சி சுந்தரம்**
https://www.youtube.com/watch?v=Zuy9b9sCgzU [20:20]

04] **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்**
https://www.youtube.com/watch?v=-QHEDCwZYaU [19:36]

@@@@@@@@@@@@@@@@@@@@@

காலவரிசை

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (ஜனவரி 8, 1901 - ஆகஸ்ட் 27, 1980) ஒரு பன்முகத் தமிழறிஞர், மொழியியலாளர், மற்றும் கல்வியாளர். இவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியாற்றினார். பத்மபூஷண் விருது பெற்ற இவரின் காலம் தமிழகக் கல்வி மற்றும் தமிழ் ஆய்வுகளில் முக்கிய மைல்கல்லாகும்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் காலவரிசை (Chronology):

- **1901 (ஜனவரி 8):** சென்னையில் (சிந்தாதிரிப்பேட்டை) தென்பட்டினம் பொன்னுசாமி - மீனாட்சி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறப்பு.
- **1923:** எம்.ஏ. (MA) பட்டம் பெற்று, வரலாறு, பொருளியல் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் தேர்ச்சி.
- **1923:** சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு.
- **1924:** சென்னை மாநகராட்சி உறுப்பினராகத் (Corporation Councilor) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **1925:** அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராகப் பொறுப்பு.
- **1934 (க்குள்):** பி.ஓ.எல் (BOL), எம்.ஓ.எல் (MOL) பட்டங்களைப் பெற்றுத் தமிழ்ப் புலமையை வளர்த்தார்.
- **1941:** நாட்டு விடுதலைப் போராட்டத்திற்காக மறியல் செய்து சிறை சென்றார்.
- **1944 - 1946:** அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி.
- **1958:** அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் மற்றும் இலக்கியத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்பு.
- **1961:** சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- **1966 - 1971:** மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் [संस्थापक துணைவேந்தராக] (https://en.wikipedia.org.en2ta.search.translate.goog/wiki/T._

P._Meenakshisundaram) (Founder Vice Chancellor) பொறுப்பு.

- **1967:** மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் பட்டம்.
- **1973:** கொழும்பு பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம்.
- **1975:** தமிழ்நாடு சாகித்ய அகாடமி விருது.
- **1976:** அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம்.
- **1977:** இந்திய அரசால் பத்மபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- **1980 (ஆகஸ்ட் 27):** காலமானார்.

முக்கியப் படைப்புகள்:

- A History of Tamil Language (தமிழ் மொழி வரலாறு)
- A History of Tamil Literature (தமிழ் இலக்கிய வரலாறு)
- Philosophy of Tiruvalluvar (திருவள்ளுவர் தத்துவம்)
- Aesthetics of the Tamils (தமிழரின் அழகியல்).

(☺)(☺) 4த 4பா ஙீ (☺)(☺)